**கல்னேவ பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கல்னேவ பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று/ தேறிய சொத்துக்கள்/ உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் கல்னேவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புகள்

#### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மைகள்

| உரிய நியமத்துக்கான தொடர்புடன் இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3.7 இலக்கம் பிரகாரம் நிறுவனமொன்று தயாரித்த வரவு செலவு திட்டத்தின் பாதீட்டு ரீதியான தகவல்கள் அக்காலப் பகுதிக்கான நிதிக்கூற்றுக்களில் சமர்பிக்க வேண்டிய போதும் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் பாதீட்டு ரீதியான தகவல்கள் இன்றி சமர்பிக்கப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் பாதீட்டு ரீதியான தகவல்களை சமர்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

#### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் நிலையான சொத்துக்கள் கொள்வனவாக காட்டியிருந்த பெறுமதியினுள் ரூபா 10,517,510 ஆன அன்பளிப்புக்கள் மற்றும் கடந்த ஆண்டு கொள்வனவு செய்து குறிப்பிடப்படாத சொத்துக்களின் பெறுமதியும் உள்ளடக்கப்பட்டிருந்தன. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சரியான பெறுமதிகள் உள்ளடக்கப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| | 396 (ஈ) | விநியோகிக்கப்பட்ட போதும் கொடுப்பனவிற்கு சமர்பிக்கப்படாத பெறுமதி ரூபா 68,378 ஆன காலம் கடந்த 08 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கிறேன். | வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 இன் 30/2016 இலக்க சுற்றறிக்கையின் 3.1 பந்தி | சபைக்கு சொந்தமான 11 வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை செய்யப்பட்டு இருக்கவில்லை. | எரிபொருள் பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 15,987,213 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 8,483,689 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

சபையின் வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றுகை தொடர்பான அவதானங்கள் பின்வருமாறு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | **வாடகை** | | |
| | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று அறவிட வேண்டிய கடையறை வாடகை ரூபா 1,420,700 தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2021.04.30 திகதியளவில் ரூபா 298,000 ஆன நிலுவைத் தொகையொன்றை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஆ) அனுமதிப்பத்திர கட்டணம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதியன்று அறவிட வேண்டிய டென்டர் குத்தகை வாடகை ரூபா 320,267 தொகையையும் 02 ஆண்டுகள் முதல் அறவிடப்படாத காணப்படும் வியாபார வரி ரூபா 91,000 தொகையையும் அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 02 ஆண்டுகளை விட பழமையான ரூபா 154,600 ஆன நிலுவை குழாய்க் கிணற்று கட்டணத்தை அறவிட மீளாய்வாண்டிலும் இயலாதிருந்ததுடன் இக் குழாய்க் கிணறுகள் பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்தன. | நிலுவை தொகையை பதிவழிக்க மதிப்பிற்குரிய ஆளுனருக்கு அறிவித்து அனுப்பப்பட்டுள்ள போதும், அதற்காக பதில் கிடைக்கவில்லை. | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(இ) ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| பிரதேச சபையினால் செயற்படுத்தப்படும் 03 நீர் கருத்திட்டங்களிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,849,143 இனை அறவிட்டிருக்கவில்லை. | ரூபா 430,545 தொகை அறவிடப்பட்டுள்ளது. | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்றாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனிம்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆண்டு முதல் நிலவிவரும் மரணித்த அலுவலளர் ஒருவரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 145,000 ஆன இடர் கடன் மீதி மற்றும் ரூபா 4,000 ஆன விஷேட முற்பண மீதியை அறவிட மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இடர் கடன் மீதியை எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். | மரணித்த அலுவலளர்களின் மீதிகளை மரணப் பணிக்கொடையிலிருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வெண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியளவில் ரூபா 21,884,636 ஆன வேலை கடன்படுனர் மீதியொன்று நிலவியதுடன் அதனுள் 02 ஆண்டுகளை விட பழமையான 08 கருத்திட்டங்களிற்குரிய ரூபா 1,390,207 ஆன பெறவேண்டிய நிறுத்தற் பண மீதியொன்று உள்ளடங்கியிருந்தது. | நிறுத்தற் பணத்தை பெற்றுக் கொள்ள உரிய கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | கடன்படுனர் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபைக்கு சொந்தமான பெறுமதி ரூபா 2,199,000 ஆன 10 நிலையான சொத்துக்கள் நீண்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்காது விளைவற்று நிலவியது. | அரிசி அரைத்தல் களஞ்சியத்தின் பண்டங்கள், கொன்கிரீட் கலவை இயந்திரம் மற்றும் மோடர் வண்டியை ஏலவிற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | சொத்துக்களை பயன்படுத்த முடியாதெனில் பொறுத்தமான வகையில் பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | வடமத்திய மாகாண கலாச்சார திணைக்களத்தினால் 2018 ஆண்டிற்காக செயற்படுத்திய சமய பாடசாலை அபிவிருத்தி மற்றும் மதஇஸ்தானங்கள் கருத்திட்ட அன்பளிப்பு மூலம் சபைக்கு கிடைத்திருந்த ரூபா 100,000 ஆன தொகையை குரித்த செயற்பாட்டை மேற்கொள்ளாது 03 ஆண்டு காலமாக வைப்புக் கணக்கில் வைப்பிடப்பட்டிருந்தது. | உரிய நிறுவனங்களை அறவூட்டி மீள்செலுத்த நடவடிக்கை எடுக்கிறேன். | கருத்திட்டத்தை செயற்படுத்த அல்லது நிதியை திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | சபை பயன்படுத்தும் ரூபா 2,463,890 பெறுமதியான 04 வாகனங்களை பதிவு செய்திருக்கவில்லை. | பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | பதிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |